முகமூடி வீரர் மாயாவி ஆவேச அதிரடி!
மாயாவியைத் தேடிய மங்கை
ராணி காமிக்ஸ்
ரூ.5

தினத் தந்தி

வழங்கும்

வெள்ளி தோறும்

சிறுவர் தங்கமலர்

★ அட்டையில் உங்கள் குழந்தையின்படம்

★ புராண படக்கதை

★ துப்பறியும் படக்கதை

★ குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்

★ மாயாஜால சிறுவர் தொடர்கதை

★ சிறுகதைகள்

★ பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளி தோறும் வண்ண புத்தகம் இலவசம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்

ராணி காமிக்ஸ் – 463
(மாதம் இருமுறை இதழ்)
அக்டோபர் 1, 2003.

முகமூடி வீரர் **மாயாவி**

GUNA KARUR

ஆவேச அதிரடி!

மாயாவியைத் தேடிய மங்கை

பெங்காலா நகருக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் வண்டிகள் வரிசையாகப் போய்க்கொண்டிருந்தன.
விக்டோரியா! நாம் பெங்காலா காடுகளை நெருங்கிவிட்டோம்!
அடடா! அழகோ அழகு! கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருக்கிறது!
நம்ம உயிருக்கும் ஆபத்து!
என்ன படுத்து விட்டீர்கள்?
சைமன்! நாலு நாளா காட்டுக்குள் பயணம் செய்கிறோம். கொரில்லா மனிதர்களைக் காணோம்?
மேடம்! கொரில்லா மனிதர்களைப் பற்றி நீங்கள் நூல் எழுதிவிட்டால், உலகப் புகழ்பெற்று விடுவீர்கள்!
உண்மைதான்! ஆனால், கொரில்லா மனிதர்களைக் காணோமே?

அப்போது காட்டுவாசிகள் வந்தார்கள்
காட்டுவாசிகள் என்ன சொல்லுகிறார்கள்?
இந்தக் காட்டுக்குள் வேட்டைக்காரர்கள் வரக்கூடாது என்கிறார்கள்!
நம்மைச் சொல்ல இவர்கள் யார்?
சுட்டுவிடாதே! நாம வந்த வேலையே கெட்டுவிடும்!!
இப்போது எனக்குப் புத்துணர்ச்சி ஏற்பட்டு விட்டது. காட்டுக்குள் போவோமா?
வேண்டாம், விக்டோரியா. ஆபத்தான காடு என்கிறார்கள். நாங்கள் முதலில் உள்ளே போய் வருகிறோம்.
கொரில்லா மனிதர்களை நான் நேரில் பார்க்க வேண்டுமே! அப்போதுதானே அவர்களைப் பற்றி எழுத முடியும்?
கொரில்லா மனிதர்கள் வாழும் இடத்தை முதலில் அவர்கள் பார்த்து வரட்டும், அம்மா!
காட்டு மனிதன் முரசு அடித்தான்
டம்... டம்... டம்...
அது கேட்டு மாயாவீ விரைந்தார்!
காட்டுக்குள் ஏதோ ஆபத்து!

முகாமில்...
சைமன்! காட்டுக்குள் போனவர்கள் இன்னும் வரவில்லையே!
ஆபத்தான காடு ஆயிற்றே, அம்மா!
சும்மா சும்மா என்னைப் பயமுறுத்தாதீர்கள்!
அப்போது மாயாவி வந்து நின்றார்!
நீ யார்? இங்கு ஏன் வந்தாய்?
நான் இந்தக் காட்டுக்குக் காவலாளி
வேட்டைக்காரர்கள் இங்கே வரக்கூடாது!
முகத்தில் அடையாளம் இருப்பதைப் பார்த்தாயா?
ஆமாம். நம்ம மாயாவிதான்!

நாங்கள் வேட்டைக்காரர்கள் அல்ல. கொரில்லா மனிதர்களைப் பார்க்க வந்திருக்கிறோம்.
அவர்கள் உங்களைப் பார்த்தால், உங்கள் உயிருக்கே ஆபத்து!
மேடம்! அவர் ஆள் அல்ல; ஆவி
சும்மா ஆவி அது இது என்று சொல்லி என்னை ஏமாற்ற வேண்டாம்!
நீங்கள் எதுக்காகக் கொரில்லா மனிதர்களைப் பார்க்க வந்திருக்கிறீர்கள்?
கொரில்லா மனிதர்கள் இன்னும் வாழுகிறார்கள் என்பதை உலகத்துக்குக் காட்ட விரும்புகிறேன்!
அதுக்கு இவரோட உதவியைக் கேளுங்க, மேடம்!


நீங்கள் காட்டைவிட்டு வெளியே போய்விடுவது நல்லது!
எங்கள் ஆட்கள் இருவர் கொரில்லா மனிதனைத் தேடிக் காட்டுக்குள் போயிருக் கிறார்களே?
சைமன்! அவங்க என்ன செய்றாங்க?
கூடாரத்தைப் பிரிக்கிறாங்க!
நான் பிரிக்கச் சொல்லவில்லையே!
ஆவி சொன்னால் கேளுங்கள், அம்மா
நீங்கள் பெங்காலியாவுக்குப் போய் ஓட்டலில் தங்குங்கள். நான் உங்கள் ஆட்களை அங்கே அழைத்து வருகிறேன்
ஆவி சொன்னால் சரியாகத்தான் இருக்கும்!
விக்டோரியா முகமூடியைப் படம் எடுத்தாள்.
கிளிக்
படம் எடுக்காதீங்க!
ஆவி என்று சொன்னீர்களே, அதுதான் படம் எடுத்தேன்!
பெங்காலியாவுக்குக் கிளம்பினார்கள்.

நம்ம ஆட்கள் ஆபத்தில் சிக்கி இருக்க மாட்டார்களே?
ஆ! ஆவியைக் காணோமே!
நம்ம ஆட்களைத் தேடிப் போயிருக்கும்.
மாயாவி மறைந்து நின்று பார்த்தார்.
பெங்காலியாவுக்குப் போவதுதான் இவர்களுக்குப் பாதுகாப்பு!
விக்டோரியா என்னைப் பட்டம்பிடித்தாளே...

பெங்காலியாவில் ஓட்டலில் தங்கினார்கள். அடுத்த நாள் காலை...
இரவில் இங்கே யாரோ வந்தமாதிரித் தெரிகிறதே...
மேடம், நீங்கள் நல்லா இருக்கிறீர்கள் அல்லவா?
நான் நல்லா இருக்கிறேன்! ஆனால், நான் எடுத்த படத்தில் ஆவிதான் இல்லை!
ஆவியை எப்படியம்மா படம் எடுக்க முடியும்?
இருவரையும் தேடி மாயாவி காட்டுக்குள் போனார். அங்கே ஒரு கொரில்லா மனிதன்.
கொர்...ர்...ர்...

மாயாவி மீது பாய்ந்தான்!
ஆ...!
யார் அவர்?
நம்மைத் தேடி வந்திருப்பாரோ?
சுட்டுக்கொல்லுவதைத் தவிர வேறு வழியில்லை!
நீங்கள் இருவரும் ஓடிப்போய்விடுங்கள்!

கொர்...ர்...ர்...
கொரில்லா மனிதன் ஆவேசமாகத் தாக்கினான்
மாயாவி திணறினார்
சிங்கத்தைவிடப் பலம் வாய்ந்ததாக இருக்கிறதே!
அவரைச் சுட்டுவிடாதே, ஜிங்!
கொரில்லா மனிதனைத்தான் குறிவைக்கிறேன்!
சுடாதீங்க!

சுடுவதைத் தவிர வேறு வழியில்லை!
!!!
கொரில்லா மனிதனை சுட்டுக் கொன்றதால் நீங்கள் பிழைத்தீர்கள்!
இந்தக் காட்டில் முயலைக்கூட சுடக்கூடாது!
நான் வந்திருக்காவிட்டால் கொரில்லா மனிதன் உங்கள் இருவரையும் கடித்துக் குதறி இருப்பான்!
விக்டோரியா பெங்காலியாவில் ஓட்டலில் தங்கியிருக்கிறாள். நீங்களும் அங்கே போங்கள்!
நாமும் அங்கே போக வேண்டியது தான்!

மாயாவி பெங்காலியாவுக்கு வந்தார்
அவர்கள் இருவரும் வந்து விட்டார்களா?
உங்களால்தான் உயிர் பிழைத்தோம் என்று சொன்னார்கள்.
விக்டோரியா மீண்டும் படம் எடுத்தாள்.
கிளிக்
நீங்கள் ஊருக்குக் கிளம்புங்கள்
கொரில்லா மனிதனைப் பார்க்காமல் நான் நியூயார்க் திரும்பமாட்டேன்.
மேடம், அவர் சொற்படி நடப்பதுதான் நல்லது!
அவர் கைவிரலிலுள்ள மோதிரத்தைப் பாருங்கள்!

விக்டோரியாவுக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி!
இந்த பிலிமும் வெள்ளையாக இருக்கிறதே!
ஓட்டலை காலி செய்துவிட்டு, நியூயார்க்குக்குப் புறப்பட்டார்கள்.
மாயாவி சொன்னபடி செய்வோம்!
மாயாவியைப் பற்றி நான் ஒரு புத்தகம் எழுதலாம் என்று நினைக்கிறேன்.
சைமன், உங்கள் உதவிக்கு மிகவும் நன்றி!
விக்டோரியா நியூயார்க்கில் ஒரு வரலாற்றுப் பேராசிரியை.
மாயாவியின் செயல்கள் எல்லாம் அதிசயமாக இருக்கின்றன! அவரைப் படம் எடுத்தாலே பிலிம் வெள்ளையாகிவிடுகிறது
கொரில்லா மனிதர்களை மறந்துவிட்டேன். மாயாவி அவர்களைவிட அதிசயமான மனிதர். ஆனால், அவர் யார் என்றே தெரியவில்லையே!
அவர்களை அழைத்துப் போக வண்டி தயாராக இருந்தது.
மாயாவியை மீண்டும் சந்திக்க முடியுமா?


மாயாவி அவர்களை அனுப்பி வைக்க வந்திருந்தார்.
இனி வந்தால் என் விருந்தாளிகளாக வாருங்கள்! வேட்டைக்காரர்களாக வரவேண்டாம்!
உங்களைப் பார்க்க நிச்சயம் வருவேன்!
உங்களைப் பற்றி ஒரு புத்தகம் எழுத விரும்புகிறேன்!
எனக்கு வரலாறே கிடையாது!
விமானம் தயாராக இருக்கிறது. கிளம்புங்கள்! நானும் புறப்படுகிறேன்!
விமானம் புறப்படும்வரை மாயாவி காத்திருக்க வில்லையே?
மாயாவி அல்லவா? திடீர் என்று வருவார்! திடீர் என்று போவார்!

இப்போது மாயாவியைப் படம் எடுத்திருக்கலாம்!
இரண்டுமுறை எடுத்தும், அவர் படத்தில் விழவில்லை! ஆச்சரியமாக இருக்கிறது!!
விக்டோரியா விமானத்தில் ஏறினாள்.
முகமூடி இன்னும் என் கண்ணுக்குள் நிற்கிறார்!
வெறுங்கையோடு ஊர் திரும்புவது எனக்கு வேதனையாக இருக்கிறது!
நியூயார்க் விமானம் புறப்படத் தயாராக இருந்தது.
ஏதாவது புத்தகம் படியுங்கள்! மனம் சரியாகிவிடும்!
நீங்கள் தொண தொணக்காமல் இருங்கள். டேவிட்!
முகமூடி உங்கள் மனதை மிகவும் பாதித்துவிட்டார் போலிருக்கிறது!
ஆமாம். அவரைப் பிரியவே எனக்கு மனமில்லை!
டேவிட்! நான் இங்கேயே இருக்கப் போகிறேன்!
என்ன சொல்றீங்க?

மாயாவியைப் பார்க்க வேண்டும்!
ஓ! ஓ! உங்களுக்கு மாயாவி பைத்தியம் பிடித்துவிட்டதா!
ஆமாம்! அவரைப் பற்றிப் புத்தகம் எழுதப் போகிறேன்!
மேடம்! விமானம் கிளம்பப் போகிறது. உங்கள் இருக்கையில் உட்காருங்கள்!
இல்லை! நான் கீழே இறங்கப் போகிறேன்!
விக்டோரியா திடீர் என்று விமானத்தி லிருந்து குதித்தாள்
மாயாவியிடம் போகிறேன்!
நான் எப்படியும் மாயாவி இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து விடுவேன்!

விக்டோரியா நேராக ஓட்டலுக்கு வந்தாள்.
என்ன மேடம் திரும்பிவிட்டீர்கள்!
சைமன்! நான் உடனே மாயாவியைப் பார்க்க வேண்டும்!
மாயாவியைப் பற்றி நான் ஒரு புத்தகம் எழுதப் போகிறேன்.
அதற்கு நீங்கள்தான் விவரங்கள் சேகரித்துக் கொடுக்க வேண்டும்.
அய்யய்யோ! அது ரொம்ப ஆபத்து!
மேடம், வேறு ஏதாவது வேணுமா?
மாயாவி என்றதுமே ஏன் இப்படிப் பயப்படுகிறீர்கள், சைமன்!
மாயாவி இந்தக் காட்டுக்குப் பாதுகாவலர். திடீர் என்று வருவார்! மாயமா மறைந்துவிடுவார்!

நீங்களும் இந்தக் காட்டில்தானே இருக்கிறீர்கள்.
உங்களுக்கு மாயாவியைப் பற்றி எல்லாம் தெரிஞ்சிருக்க வேண்டுமே?
அவரைத் தெரிந்துகொள்ள முயற்சிப்பதே ஆபத்துதான்!
மாயாவியைப் பற்றி உங்களுக்குத் தெரிந்ததைச் சொல்லுங்கள், சைமன். பிளீஸ்...!
மாயாவியைப் பற்றி நிறையச் சொல்லுவார்கள். சுருக்கமாகச் சொல்லுவது என்றால்... மாயாவி ஒரு புரியாத புதிர்!
மாயாவியின் கதையை விக்டோரியா ரசித்துக் கேட்டாள்.
மாயாவி கடலில் தோன்றியவர் என்று பெரியவர்கள் சொல்லுவார்கள்! மாயாவி கடலில் எதிரிகளைப் பந்தாடியதாகப் பல கதைகள் சொல்லுவார்கள்!

அதுக்குள் எங்கே கிளம்பிவிட்டீர்கள்?
மாயாவியைப் பற்றியக் கதைகளை சேகரிக்கத்தான்!
காட்டுக்குள் போய்ப் பெரியவர்களைப் பார்த்தால் சொல்லுவார்கள் அல்லவா?
காட்டுக்குள் போவது என்றால், இதைக் கழுத்தில் போட்டுக் கொள்ளுங்கள்!
என்ன இது?
மாயாவியின் அடையாளக் குறி.
காட்டுக்குள் எந்த ஆபத்து வந்தாலும் உங்களைப் பாதுகாக்கும்?

மண்டைஓடு எச்சரிக்கை செய்வது! அடுத்தது நண்பனாகக் காட்டும்!
விக்டோரியா ஒரு வாடகைக் காரில் வந்தாள்.
நிறுத்துங்க! நான் இங்கே இறங்கிக் கொள்ளுகிறேன்!
வாடகைக் கார்
இங்கே நிறைய ஆட்கள் இருக்கிறார்கள். இவர்களிடம் மாயாவியைப் பற்றிக் கேட்கலாமா?
உங்களுக்கு மாயாவியைத் தெரியுமா?
நாங்கள் பார்த்ததேயில்லை!
உங்கள் முகத்தில் மாயாவியின் முத்திரை இருக்கிறதே! இது எப்படி வந்தது?
என்ன கேட்டீங்க, மேடம்?

விக்டோரியா அவரைப் படம் பிடித்தாள்.
ஏய்... என்னைப் படம் எடுக்காதே!
கிளிக்
என் புத்தகத்தில் உங்களைப் பற்றி எழுதப் போகிறேன்! நீங்கள் பெரிய ஆளா ஆகிவிடுவீர்கள்!
நான் பெரிய ஆளா ஆயிடுவேனா?
ஆமாம்! என் கேள்விக்கு முதலில் பதில் சொல்லுங்கள்!
உங்கள் முகத்தில் எப்படி மண்டைஓட்டு முத்திரை வந்தது?
ஒரு பயங்கர ஆளோடு மோதினேன். அவன் என் முகத்தில் குத்திய முத்திரை, இது.
அந்த ஆள் யார்?
மறந்து போச்சு!
மறைக்காதீர்கள்! மாயாவிதானே!

உங்களுக்கு மாயாவியைத் தெரியுமா?
நானும் பார்த்திருக்கிறேன்!
ஒரு இரவு மாயாவியை சந்தித்தேன்
என் கை விரல்களைப் பாருங்கள். அப்போது என்ன நடந்தது என்று தெரியும்!
மாயாவியைவிட நீங்கள் குண்டாக இருக்கிறீர்களே?

நல்லவர்! வல்லவர்! அறுபது ஆண்டுக்கு முன் மாயாவி என்னைக் காப்பாற்றினார்.
அறுபது ஆண்டாக உங்களுக்கு மாயாவியைத் தெரியுமா? அதைச் சொல்லுங்களேன்!
அப்போது நான் குழந்தை. படிக்கப் பக்கத்து ஊருக்குப் போனேன். காட்டைக் கடக்க வேண்டும்.
ஒரு நாள் காட்டுக்குள் வேட்டைக்காரர்கள் புகுந்துவிட்டார்கள்...
மாயாவியின் அடையாளச் சின்னம் அல்லவா, இது? உனக் எப்படிக் கிடைத்தது?

யானைகளை வேட்டையாடினார்கள். என்னையும் அழைத்தார்கள். ஆனால், காட்டில் வேட்டையாடக்கூடாது என்று காட்டுவாசிகள் எதிர்த்தார்கள்.
வெளியே போங்கள்!
மாயாவியைப் பற்றிச் சொல்லுங்கள்!
அதைத்தான் சொல்ல வருகிறேன். ஒரு வேட்டைக்காரன் வேட்டுக் கிளப்பிப் பயம் காட்டினான்! கொலை விழுமோ என்று நான் பயந்தேன்!
ஆனால், காட்டுவாசிகள் காட்டுக்குள் போய்விட்டார்கள்!
காட்டுவாசிகளுக்கு மாயாவிதான் பாதுகாப்பு! வேட்டைக்காரர்கள் வேறு இடத்துக்குப் போனார்கள்.
வண்டியில் ஏறிக்கொள்!
வண்டியில் ஏறிக்கொண்டேன்!



இரவு ஓரிடத்தில் முகாமிட்டார்கள்.
அந்த இடத்தில் எந்த சத்தமும் இல்லை. தவளைகள் சத்தம் கூடக் கேட்கவில்லை! வேட்டைக்காரர்கள் பயந்துவிட்டார்கள்!
இந்நேரம் சிங்கம், புலியெல்லாம் இ தேடக் கிளம்புமே..
சட்டென்று ஒரு குரல் கேட்டது. அது மாயாவியின் குரல் என்பது எனக்குத் தெரியும்!
இவர்கள் துப்பாக்கியை எடுத்தார்கள். அப்போதும் குரல் கேட்டது.
உங்கள் குண்டுகளை வீணாக்காதீர்கள்!

வேட்டைக்காரர்கள் சரமாரியாக சுட்டார்கள்!
உங்கள் துப்பாக்கிக் குண்டுகள் என்னை ஒன்றும் செய்யாது
எங்கே பதுங்கி யிருக்கிறாய்? வெளியே வா!
இதோ வந்து விட்டேன்!
மாயாவி வேட்டைக்காரர்களைத் துவைத்து எடுத்து விட்டார்!
மூன்று வேட்டைக்காரர்களும் கீழே விழுந்தார்கள்.
அவர்கள் மூன்று பேர் முகத்திலும் இதே போல் முத்திரை பதித்தார்!
ஒரே குத்திலா?
ஆமாம்! மாயாவி குத்துவிட்டால் இடி முழக்கந்தான்!

பிறகு மாயாவி என்ன செய்தார்?
காட்டுக்குள் போய்விட்டார்!
நான் இங்கே இருப்பவன்தான்!
காட்டுக்குள் வேட்டையாட யார் வந்தாலும் இதே கதிதான்!
நீங்கள் என்ன செய்தீர்கள்?
மாயாவியைப் பார்த்ததும் பயந்துவிட்டேன்! அவருடன் பேசக்கூட முடியவில்லை!

மாயாவி எங்கே இருக்கிறார்?
அது யாருக்கும் தெரியாது!
காட்டுக்குள்தானே இருக்கிறார்?
ஆமாம்! ஆனால், காட்டுக்குள் எந்த இடம் என்று யாருக்கும் தெரியாது!
எனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறேன். மாயாவி ஒரு குகையில் இருக்கிறார்.

குகை நிறைய பொன்னும் வைரமும் குவிந்து கிடக்கின்றன என்கிறார்கள்!
மாயாவியின் கருவூலம் எங்கே இருக்கிறது?
அவன் திருடன்! என்னிடம் சொல்லுங்கள்!
மாயாவியோட கருவூலம் பற்றிச் சொன்னது தப்பாப் போச்சே!
நீங்கள்தான் என்னை அந்தக் கருவூலத்துக்குக் கூட்டிப் போகவேண்டும்.

மாயாவியின் அனுமதி இல்லாமல் யாரும் அங்கே போக முடியாது!
வாடிக்கையாளர் வந்துட்டாங்க. பிறகு பேசுவோம்!
மாயாவியின் கதையை எழுத நான் உங்களைத்தான் நம்பியிருக்கேன்.
எனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறேன்.
ஒரு நாள் காட்டுக்கு வேட்டைக்காரர்கள் வந்தார்கள். அவர்களை குதிரைப் படை வீரர்கள் பிடித்துப் போனார்கள்.

கதையை மாற்றாதீர்கள்! மாயாவியைப் பற்றிச் சொல்லுங்கள்! மாயாவியின் கருவூலம் எங்கே இருக்கிறது? அதை மட்டும் சொல்லுங்கள், போதும்!
சும்மா இரு, ஜெர்க்.
உனக்குப் பயந்துகொண்டுதான் அவர் எதுவுமே சொல்ல மறுக்கிறார்!


விக்டோரியா அறைக்கு வந்தாள்.
மாயாவியின் வாழ்க்கை அற்புதமானது. குகை வாழ்க்கை... மக்கள் தொண்டன் காட்டுவாசிகளின் பாதுகாவலன்... வாழ்க்கை முழுக்கப் போராட்டம். இதை எழுதினால் ஒரு துப்பறியும் நாவல் போல சூடாக இருக்கும்!
மாயாவியை சந்தித்தால் தான் என் கனவு நிறைவேறும்!
விளக்கை அணைத்து விட்டுப் படுத்தாள்.
முதியவரும் வீட்டுக்குக் கிளம்பினார்.
குட்நைட் சாம்!
அறுபது ஆண்டுக்கு முந்தைய வாழ்க்கையை நினைத்துப் பார்த்தால் மனதுக்குக் குதூகலமாகத்தான் இருக்கிறது!
ஆனால், மண்டைஓட்டு முத்திரையை நினைத்தால்தான் பயமாக இருக்கிறது!

என்னதான் இருந்தாலும் மாயாவியின் மர்மக் கருவூலம் பற்றி விக்டோரியாவிடம் நான் சொல்லி யிருக்கக்கூடாது.
அப்போது கதவு தட்டப்பட்டது!
யாராக இருக்கும், இந்நேரம்?
கிழவர் பயந்து நடுங்கினார்.
மாயாவியாக இருக்குமோ...
நான் கதை சொன்னது மாயாவியின் காதுக்குப் போய்விட்டதோ?

கதவைத் திறந்தவர் அதிர்ந்தார்!
ஆ...!
மரியாதையாய்ப் போய்விடுங்கள்!
போவதற்காக நாங்கள் இங்கே வரவில்லை.
மாயாவியின் கருவூலம் எங்கே இருக்கிறது? சொல்லு!
எனக்குத் தெரியாது... நான் சொல்லமாட்டேன்!
உன் உயிரை எடுத்துவிடுவேன்! சொல்லு!

மறுநாள் காலை. விக்டோரியா எழுந்தாள்.
மாயாவியைப் பார்க்க வேண்டுமே?
உள்ளே இருவர் வந்தனர்.
ஆ... நீங்களா?
நாங்கள் காட்டுக்குள் போகிறோம். நீங்களும் வருகிறீர்களா?
என் அறைக்குள் எப்படி வந்தீர்கள்? முதலில் வெளியே போங்கள்!
மரியாதையா பேசத் தெரியாது போலிருக்கிறதே!
மரியாதை கொடுப்பதே தப்பு!
எழுந்திரு! எங்கள் பின்னே வா!!

கொஞ்சம் பொறுங்கள்!
அப்படி வா வழிக்கு!
மாயாவியின் கருவூலத்தை அள்ளி வந்துவிடலாம்!
ஒழுங்கா நட! இல்லையே உன் பிணம் விழும்!!
என்னம்மா கண்ணு இப்படிப் பார்க்கிறே!
இவளை வைத்தே நமது வேலையை முடித்துவிடலாம்!
எக்கசக்கமா இவர்களிடம் மாட்டிக் கொண்டேனே!

ஏறு காரில். நான் சொன்னதைக் கேட்காததால்தான் அந்தக் கிழவனைக் கொன்றுவிட்டோம்!
உன்னை முன்வைத்தே நாங்கள் மாயாவியின் கருவூலத்துள் புகுந்து விடுவோம்
தப்பிக்க முயற்சித்தால் கிழவன் கதிதான் உனக்கும்!
பெரியவர் இருந்திருந்தால், மாயாவியின் கதை கிடைத்திருக்கும். கொன்றுவிட்டார்களே, பாவிகள்!
கருவூலக் குகை இருக்கும் இடத்தை இவர்கள் தெரிந்துகொண்டு விட்டார்களா?

நாம் இப்போது மாயாவியின் கருவூலத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறோம்.
அது எங்கே இருக்கிறது?
சும்மா நடிக்கிறாள். கருவூலக் குகை இவளுக்குத் தெரியும்.
ஒரு வாரமாகக் காட்டுக்குள் அலைந்தார்கள்.
கருவூலக் குகையைக் காணோமே? இவளும் தெரியாது என்கிறாள்.
காட்டுவாசி ஒருவன் பார்த்தான்.
காட்டுக்குள் இவர்களுக்கு என்ன வேலை?

ஆதிவாசிகள் முரசு அடித்தார்கள்.
டம்... டம்... டம்...
ஆ! முரசொலி!!
காட்டுவாசி களாகத்தான் இருக்கும்!
மாயாவிக்கு ஆயிரம் கண்ணும், ஆயிரம் காதும் உண்டு என்பார்களே!
மாயாவியின் குகையில்...
மாயாவி! காட்டுக்குள் முரசொலி கேட்கிறது! ஏதோ ஆபத்து!
மீண்டும் வேட்டைக்காரர்களோ?
நான் போய்ப் பார்க்கிறேன்!

நள்ளிரவு.
என்ன ஆச்சரியம்! பறவைகள், மிருகங்கள், தவளைகள் சத்தத்தையே காணோமே!
எச்சரிக்கையாக இருப்பதுதான் நல்லது!
அவன் மீது மாயாவி பாய்ந்தார்!
அய்யோ!
கொஞ்ச நேரம் உன்னைத் தூங்கப் போடுகிறேன்!
என் குகைக்கா வருகிறீர்கள்?
பெட்ரோல்


ஒரு குத்து!
ஆ...!
அது... அது... மாயாவிதான்!
பொழுது விடிந்தது.
நம்ம ஆட்களைக் காணோமே? மாயமாகத்தான் இருக்கிறது!
காட்டுவாசிகளின் வேலையாக இருக்கும்! எப்படி சமாளிக்கப் போகிறீர்கள்?


மாயாவி திரும்பினார்.
அவர்கள் இனி இந்தப் பக்கம் வரமாட்டார்கள்! நம்ம ஆட்களே அவர்களை அடித்து விரட்டியிருக்கலாமே?
அவர்களிடம் துப்பாக்கி இருக்கிறது. காட்டுவாசிகளால் சமாளிக்க முடியாது!
காட்டுவாசிகளிடம் மாயாவி பேசினார்.
கொள்ளையர்களைப் பயங்காட்டுங்கள். ஆனால், யாரையும் கொன்றுவிடாதீர்கள்!
பயங்கரக் காட்டுக்குள் வந்து மாட்டிக் கொண்டோம். நம்மைக் காப்பாற்ற மாயாவிதான் வரவேண்டும் போலிருக்கிறது!

காட்டுவாசிகள் வருகிறார்கள்! நாம் பதுங்கிக்கொள்ளுவது தான் நல்லது!
அம்புகள் சரமாரியாகப் பாய்ந்து வந்தன!
நாம் தொலைந்தோம்!
துப்பாக்கியைப் பயன்படுத்த வேண்டியதுதான்!
ஊகூம்! இவர்களிடம் துப்பாக்கி எடுபடாது! உயிருக்கும் துணிந்தவர்கள்!!
காட்டுவாசிகள் தாக்குதலில் இறங்கினார்கள்!
அய்யோ!

எல்லாம் விஷம் தடவிய அம்புகள்! நாம் திரும்பிவிடுவதுதான் நல்லது!!
திடீர் என்று யாரையும் காணோமே!
துப்பாக்கியைப் பார்த்ததும் ஓடிவிட்டார்கள் போலிருக்கிறது!
நாம் திரும்பி விடலாம்!
மாயாவியின் கருவூலத்தைக் கொள்ளையடிக்காமல் திரும்பப் போவதில்லை!
காட்டுக்குள் நடந்தார்கள். மாயாவி பார்த்தார்.
இவள் விக்டோரியா அல்லவா... விமானத்தில் ஏற்றிவிட்டேனே...
இவர்களுடன் எப்படி?


ஒருவன் முகத்தில் என் முத்திரை இருக்கிறதே! என்னிடம் அடி வாங்கியுமா இங்கே வருகிறான்?
வரட்டும்! இன்னொரு முத்திரை பதிக்கிறேன்!!
திடீர் என்று விக்டோரியா மயங்கி விழுந்தாள்.
கடுமையான காய்ச்சல்! எப்படி நடக்கப் போகிறாளோ?
இவளைத் தோளில் தூக்கிக்கொண்டுதான் நடக்க வேண்டும்!

நம்மாலேயே நடக்க முடியவில்லை. சுமை வேறா? இவளால் நமக்கு எந்தப் பயனும் இல்லை!
அவளை இங்கேயே விட்டுவிட்டுப் போய்விடலாம்!
அதுதான் சரி!
புதையல் நம்ம இரண்டு பேருக்கும்தான்!
என்ன சத்தம்?
விக்டோரியா எழுந்து ஓடுகிறாள்!
அவளை உயிரோடு விட்டால் ஆபத்து!
தப்பிவிட்டாளே!

துப்பாக்கிச் சத்தம் கேட்டு, மாயாவி மாயமாக வந்தார்!
இவனை சுட்டுத்தள்ளு!
ஒருவரை ஒருவர் சுட்டுக் கொண்டு விழுந்தார்கள்
மாயாவியை எதிர்ப்பவர்களுக்கு இதுதான் முடிவு!
என் முன்னோர்களிடம் இருந்து எனக்குக் கிடைத்த போராற்றல் இது!


மாயாவி இருவரையும் தூக்கிச் சென்று, அடக்கம் செய்தார்!
இங்கே வரும் கொள்ளையர், வேட்டைக்காரர்களுக்கு இது எச்சரிக்கை!
திரும்பும்போது விக்டோரியா விழுந்துகிடப்பதைப் பார்த்தார்.
ஆ! விக்டோரியா மயங்கிக் கிடக்கிறாளே!
அவளைத் தூக்கிக்கொண்டார்.
முதலில் இவளைக் காப்பாற்ற வேண்டும்.
மாயாவி குகைக்கு விரைந்தார்
குரன் நல்ல வைத்தியன்! இவர்களுடன் வந்த விக்டோரியா ஏன் பிரிந்தாள்.
இவர்கள் கொள்ளைக்காரர்கள் என்பது தெரிந்துவிட்டதோ?

மாயாவி ஒரு அருவியைத் தாண்டிப் போனார்.
மயக்கத்தில் இருக்கும் விக்டோரியாவுக்கு இந்த நுழைவு வாசல் தெரிய வாய்ப்பில்லை!
குகைக்கு வந்துவிட்டார்.
குரன்! இந்தப் பெண் கடுமையான காய்ச்சலில் மயங்கி விழுந்து விட்டாள்!
உள்ளே கிடத்துங்க! நான் மூலிகை பறித்து வருகிறேன்!
குரன் மருந்து கொடுத்தான்.
இப்போது எப்படி இருக்கிறாள், குரன்?

நல்லா இருக்கிறாள். கடுமையான காய்ச்சலால் மூளைதான் கொஞ்சம் பாதித்துவிட்டது!
அதுவும் நல்லதுதான்!
விக்டோரியாவுக்கு இங்கு வரும் பாதையும் தெரியாது. என்னைப் பற்றி எழுதவும் முடியாது!
யாராலும் முடியாது! அது அவ்வளவு இரகசியம்!
என் மூதாதையரின் வரலாறு இந்தக் குகைக்குள்தானே இருக்கிறது?
பாந்தர் ஆதிவாசிகளுக்கு மட்டுமே உங்கள் வரலாறு தெரியும்!

ஆனால், அவர்கள் உங்களைத் தெய்வமாக நினைக்கிறார்கள்!
உங்கள் கதையை யாரிடமும் அவர்கள் சொல்லமாட்டார்கள்!
மாயாவி நீடூழி வாழ்க!
மாயாவி நீடூழி வாழ்க!
சில மணி நேரம் சென்றது.
விக்டோரியா
நான் இப்போ எங்கே இருக்கேன்?
முதலில் இந்த உடையை அணிந்துகொள்ளுங்கள்!


மாயாவி! விக்டோரியா நல்ல குணமாகிவிட்டார்கள்!
நான் உங்களைத்தான் பார்க்க வந்தேன்.
முதலில் ஓய்வு எடு. பிறகு பேசுவோம்!
இதுதான் உங்கள் குகையா?
குரன்! விக்டோரியா இன்னும் சுயநினைவோடு இருக்கிறாளே?
சுயநினைவை மறக்க வேறு ஒரு மூலிகை இருக்கிறது!
அதை இப்போது கொடுத்தால், உடல்நிலை மீண்டும் கெட்டுவிடும்!
நான் இன்றைக்கே விக்டோரியாவை பெங்காலியாவுக்கு அழைத்துப் போகலாம் என்று நினைத்தேன்.
ஒரு நாலைந்து நாள் போகட்டும்.

விக்டோரியா எங்கே?
அழைச்சுட்டுப் போங்க! ஒன்றும் ஆயிடாது!
விக்டோரியாவைத் தேடி குகைக்குள் வந்தார்கள்.
இங்கேதான் இருக்க வேண்டும்!
விக்டோரியா! நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?
ஆ!
பயப்படாதே! நான் உன்னை ஒன்றும் செய்துவிடமாட்டேன்!
இங்குள்ள புத்தகங்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன்!
இந்த மொழி என் முன்னோர்களுக்கும் எனக்கும் தவிர வேறு யாருக்கும் தெரியாது!

என் முன்னோரைப் பற்றிய வரலாற்றுப் புத்தகங்கள் இவை.
நானும் அன்றாடம் நடப்பதை எழுதி வைக்கிறேன்.
உங்கள் மூதாதையரைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்.
நீ புத்தகம் எழுதப் போகிறாய் அல்லவா?
ஆ...! தலை வலிக்கிறதே!
அது வேண்டாம்! இங்கே பெரிய புதையல் இருக்கிறதாமே?
நம்ம குகையைப் பற்றி இவளுக்கு நிறையத் தெரிஞ்சிருக்கு. இவளை வெளியேற்றுவதுதான் நல்லது!

கருவூல அறையைத்தானே பார்க்க வேண்டும்? என் பின்னே வா!
என்னைப் பிடித்துக்கொள்!
தலை சுற்றுகிறதே!
இதுதான் கருவூல அறையின் நுழைவு வாயில்!
இதுதான் மாயாவியின் கருவூல அறை. எல்லாம் என் மூதாதையரின் சொத்து!

இவ்வளவு நகை இருக்கே! நட்சத்திரம் போல மின்னுகிறதே!
கொள்ளையரிடமிருந்து மீட்ட நகைகள், இவை!
இவள் வைர நகைகளே பார்த்திருக்கமாட்டாள் போலிருக்கிறது!
இந்த வைர மாலை என்னோட அன்புப் பரிசு!
விக்டோரியா! இந்தக் கருவூல அறை பற்றி எதுவும் எழுதாதே!
என்னால் எழுதாமல் இருக்கவே முடியாது.

இந்த நகைகளையெல்லாம் படம் பிடித்துப் பெரிய புத்தகமாக எழுதப் போகிறேன்!
என்ன, திடீர் என்று மயங்கிவிட்டாள்
நான் கொடுத்த மூலிகை வேலை செய்கிறது.
என்னையும் இந்த இடத்தையும் மறந்துவிடுவாளா?
ஆமாம்! இனி பெங்காலியாவுக்கு அழைத்துப் போங்கள்!

இரவில் பெங்காலியா.
நல்ல உறக்கமா?
விக்டோரியாவின் அறை சாவியைக் கொடுங்கள்!
!?!
விக்டோரியாவுக்கு என்ன ஆச்சு?
தெரியவில்லை! உடனே ஒரு மருத்துவரைக் கூப்பிடுங்க!


சீக்கிரம் வாங்க! நான் கிளம்பறேன்!
மருத்துவர் வந்தார். பார்த்தார். மருந்து தந்தார்.
விக்டோரியா கண் விழித்தாள்.
நீங்கள் யாரு? நான் எங்கே இருக்கேன்?
நீங்கள் ஓட்டல் அறையில் இருக்கிறீர்கள். மயக்கமாக இருந்த உங்களுக்கு வைத்தியம் செய்ய வந்த மருத்துவர் நான்.
நான் வேறு எங்கோ இருந்தேனே...இங்கே எப்படி வந்தேன்?
விக்டோரியா யோசித்துப் பார்த்தாள்.
இரண்டு கொள்ளையர்கள் என்னைக் காட்டுக்குக் கூட்டிப் போனார்கள்... அங்கே எனக்குக் காய்ச்சல் வந்தது...
என்னை இங்கே கொண்டுவந்தது யார்? திருடர்களா?

எனக்குத் தெரியாது அம்மா!
யாரோ ஒருவர் உங்களைத் தூக்கி வந்ததாக ஓட்டல் மேலாளர் சொன்னார்...
!?
யார் அவர்? நிச்சயம் திருடர்களாக இருக்காது!
நீங்கள் காட்டுவாசிகளின் உடை அணிந்து இருந்தீர்கள்.
இதுவா? இது என் உடை இல்லையே!
கடுமையான காய்ச்சல் உங்களைத் தாக்கியதால், உங்கள் நினைவ குறைந்துவிட்டது போலிருக்கிறது!

என் கழுத்தில் நெக்லஸ்... இது ஏது?
உங்களுக்கே தெரியாவிட்டால் எனக்கு எப்படித் தெரியும்?
ஒரே குழப்பமாக இருக்கிறது. நான் இன்றைக்கே ஊருக்குக் கிளம்புவதுதான் நல்லது.
சொந்த இடம்தான் சொர்க்கம், அம்மா.
விக்டோரியா விமான நிலையத்துக்கு வந்தாள்.
மாயாவியைப் பார்க்காமலே போகிறேனே... இன்னொரு முறை பார்ப்போம்...
இப்போது உடல் நலம்தான் முக்கியம்!
என்ன நடந்தது... நினைத்துப் பார்க்கவே முடியவில்லையே! மனம் தள்ளாடுகிறது!

மாயாவியைப் பார்க்க மீண்டும் இங்கே வரவேண்டும்!
மேடம்! இந்த வைர நெக்லஸ் எங்கே வாங்கினீர்கள்? கண்ணைப் பறிக்கிறது!
உங்களுக்கு இந்த நகை பற்றித் தெரியுமா?
நான் ஒரு நகை வியாபாரி. இது ஒரு அபூர்வ நகை: உலகம் முழுக்கத் தேடினாலும் கிடைக்காது!
இது என் நகை இல்லையே? எப்படி வந்தது?
மாயாவி என் கனவில் வந்து பரிசு அளித்திருப்பாரோ...
மாயாவி இந்த மேகக் கூட்டத்திலும் இருக்கலாம்!

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி பிரஸ், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. ஆசிரியர்: அ.மா. சாமி, 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.

அடுத்த
காமிக்ஸ்

தீபாவளி சிறப்பிதழ்

ஜேம்ஸ்பாண்டு 007

ஆவேசப் பாய்ச்சல்!

கடல்பாம்பு

வண்ணப் படக்கதை!

நூறு பக்கங்கள்!

ஆனால், அதே ரூ. 5தான்!!

உங்கள் பிரதிக்கு இன்றே கடைக்காரரிடம் பதிவு செய்யுங்கள்!

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.

PARLE
2 பார்லே-ஜீ
75 கி. பேக்குகளுடன்
சூப்பர்மேனின் மினி காமிக்
இலவசமாகப் பெறுங்கள்
சூப்பர்மேன்™
PARLE
Parle-G
BISCUITS
குறைந்தபட்சம் 12 சூப்பர்மேன் மினி காமிக்குகளை சேகரித்து பரவசமூட்டும் பரிசுகளை வெல்லுங்கள்!